O.S. No: 87/2015

பெயர்: மகேந்திரன்

**பி.சா. 3**

17-09-2025

**6 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1998 ஆம் ஆண்டு முதல் இன்று வரை 6 ஆம் பிரதிவாதி வழக்கறிஞராக பணியாற்றி வருகிறார் என்றால் சரி . 6 ஆம் பிரதிவாதி தன் சுயசம்பாத்தியத்தில் பல சொத்துக்களை வாங்கியுள்ளார் என்றால் சரி . தாவா சொத்தில் காட்டப்படாத சொத்துக்களும் 6 ஆம் பிரதிவாதி பெயரில் உள்ளது என்றால் சரி . 6 ஆம் பிரதிவாதி 2006 முதல் வருமான வரி செலுத்தி வருகிறார் என்றால் சரி . 6 ஆம் பிரதிவாதி வாங்கியுள்ள சில சொத்துக்களை முதல் வாதியும் அவரது குடும்பத்தினரும் இன்றைய தேதிவரை அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரி . நான் அழகிரிசாமியிடம் வாங்கிய சொத்தில் ஒரு பகுதியை 6 ஆம் பிரதிவாதி பெயரில் செட்டில்மெண்டாக எழுதி வைத்துள்ளேன் என்றால் சரி. அந்த சொத்து இந்த வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளது என்றால் ஆமாம் . 6 ஆம் பிரதிவாதி தனிப்பட்ட முறையில் சம்பாதித்த சொத்துக்களை முன்விரோதம் காரணமாக தான் பாகப்பிரிவினையில் காண்பித்துள்ளார்கள் என்றால் ஆமாம். முதல் வாதி காவல் நிலையத்தில் என் மீது கொடுத்த புகாரில் 6 ஆம் பிரதிவாதியையும் சேர்த்து கொடுத்துள்ளார் என்றால் ஆமாம். அந்த புகார் பொய் புகார் என்று முடிக்கப்பட்டது . விஜயராஜுக்கு நாகராஜ படையாச்சி எழுதி வைத்து சொத்துக்கள் அவருடைய தனிப்பட்ட சொத்துக்கள் என்றால் ஆமாம். உயில் எழுதும் போது நாகராஜ படையாச்சி நல்ல உடல் நிலை மற்றும் மன நிலையில் இருந்தார் . நாகராஜ படையாச்சி 2013 வரை நன்றாக இருந்தார் . 2013 கடைசியில் தான் அவருக்கு உடல் நிலை சரியில்லாமல் போனது . சுவாமிநாதன் குடும்ப

பொறுப்புகளை எப்போதும் கவனித்ததில்லை. நாகராஜ படையாச்சி தான் பார்த்து வந்தார். வாதியின் இந்த தாவா நிலைக்கத்தக்கதல்ல தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் ஆமாம்.

**7 ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லையென தெரிவிக்கப்பட்டது.**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

தாவா சொத்துக்கு ஆதியில் சீனன் படையாச்சிக்கு சொந்தம் என்றால் எனக்கு என் அப்பா சொத்து தான் என்று தெரியும் . சீனன் படையாச்சி என் தாத்தாவுடைய அப்பா . அவர் மனைவி பெயர் பொன்னம்மாள். சீனன் படையாச்சிக்கு 3 மகன்கள். நடேச படையாச்சி, ராமசாமி படையாச்சி, பக்கிரிசாமி படையாச்சி. நடேச படையாச்சி என்பது என் தாத்தா. நடேச படையாச்சியின் மனைவி பெயர் பார்வதி . நடேச படையாச்சிக்கு என் தகப்பனார் ஒரே பையன் தான் . என் தகப்பனாருக்கு இரண்டு தாரம். முதல் மனைவி பெயர் சுந்தராம்பாள் . சுந்தராம்பாளின் மகள்கள் தான் வாதிகள், 1 முதல் 3 பிரதிவாதிகள் அவருடைய மகன்கள். சுந்தராம்பாள் 1966 இல் இறந்தாரா என்றால் எனக்கு தெரியாது . என் தாயார் பெயர் சந்திரா . நாகராஜ படையாச்சிக்கும் என் அம்மா சந்திராவிற்கும் 5 குழந்தைகள். 4 ஆண் குழந்தைகள், ஒரு பெண். என் அம்மாவிற்கும் அப்பாவிற்கும் எப்பொழுது திருமணமானது என்று தெரியாது. என் அம்மா சந்திரா சுந்தராம்பாளுக்கு சித்தப்பா பொண்ணு , தங்கை முறை. சந்திராவிற்கு நான், சிவக்குமார், பிரபாகரன், விஜயராஜ், ஹேமலதா. இதில் சிவக்குமார் 2017 இல் இறந்துவிட்டார். பிரபாகரன் 2004 இல் இறந்துவிட்டார். 13 ஆம் பிரதிவாதி ஈஸ்வர் என் மகன் . 14 ஆம் பிரதிவாதிவிமலா என் மனைவி. அவர்கள் இரண்ட பேர் பெயரிலும்

சொத்து இருப்பதால் தான் இந்த வழக்கில் சேர்த்துள்ளார்கள் என்றால் அது நாங்கள் வாங்கிய சொத்து . 1950 இல் நடேச படையாச்சி மற்றும் அவர்களுடைய சகோதரர்களுக்கிடையே பாகப் பிரிவினை ஏற்பட்டதா என்றால் ஏற்பட்டிருக்கலாம் . அந்த ஆவணத்தை நான் வாங்கி பார்க்கவில்லை. வா.சா.ஆ. 27 தான் நாகராஜ படையாச்சி மற்றும் அவர்கள் சகோதரர்களுக்கிடையே ஏற்பட்ட பாகப்பிரிவினை என்றால் சரி. அதில் என் தாத்தா நாகராஜ படையாச்சிக்கு ஏ செட்டியூல் சொத்து ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரி. வாதி தாக்கல் செய்த ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் வாங்கி பார்க்கவில்லை. இந்த ஆவணத்தில் உள்ள சொத்துக்கள் அனைத்தும் சீனன் படையாச்சிக்கு சொந்தமான சொத்துக்கள் என்றால் சரியல்ல . நடேச படையாச்சிக்கு 20 ஏக்கர் ஒதுங்கியிருக்கும் என்றால் தெரியாது . சர்வே நம்பர் 158/பி1 என்பது தற்போது நான் குடியிருக்கும் வீடு என்றால் சரி . இந்த வீட்டை நடேச படையாச்சி தான் கட்டினார் என்றால் என் அப்பா தான் கட்டினார் . வீட்டை என் அப்பா கட்டி, நடேச இல்லம் என்று பெயர் வைத்தார். அந்த வீட்டில் தான் நானும் விஜயராஜும் குடியிருந்து வருகிறோம். என் அப்பா நாகராஜ படையாச்சி சினிமா தேட்டர் நடத்தினார் . அந்த சர்வே நம்பர் தெரியாது. பிரசிரண்டாக இருந்தார். இதெல்லாம் என் அம்மா சொல்லி தான் தெரியும். மரப்பட்டறை, அரிசி அரைவை மில் வைத்திருந்தார் . கள்ளுக்கடை நடத்தி வந்தார் . எந்த வருடத்தில் இருந்து எந்த வருடம் வரை கள்ளுக்கடை நடத்தினார் என்று தெரியாது . யார் பெயரில் நடத்தினார் என்றும் தெரியாது . ரைஸ் மில் நடத்திய அடிமனை யார் பெயரில் உள்ளது என்றால் அனைத்து சொத்துக்களும் என் அப்பா வாங்கியது தான். அவர் பொண்ணு பெயரிலும் பிள்ளைகள் பெயரிலும் சொத்துக்கள் வாங்கினார் . மேற்சொன்னவற்றில் இருந்து என் அப்பாவிற்கு எவ்வளவு வருமானம் வந்தது என்று என்னால் குறிப்பிட்டு

சொல்ல முடியாது. என் அப்பா வருமான வரி செலுத்தினாரா என்று தெரியாது. எங்கள் குடும்ப தலைவர் என் அப்பா தான். இது இல்லாமல் விவசாயமும் பார்த்து வந்தார். இரண்டு டிராக்டர் வைத்திருந்தார். என் தகப்பனார் முழு நேர விவசாயி என்றால் ஆமாம். என் தகப்பனார் முதன் முதலாக எப்பொழுது சொத்து வாங்கினார் என்று தெரியாது . நடேச படையாச்சி எப்பொழுது இறந்தார் என்று தெரியாது . அவர் 1967 இல் இறந்தாரா என்றால் இருக்கலாம். நான் பிறந்த வருடம் 1967. என் தகப்பனாரும் நடேச படையாச்சியும் கூட்டு குடும்பமாக இருந்தார்களா என்று தெரியாது. நடேச படையாச்சி இறக்கும் வரை சர்வே எண் 158/பி1 இல் தான் இருந்தாரா என்று தெரியாது. என் தாத்தா நடேச படையாச்சி எழுதி வைத்த உயிலின் படி கிடைத்த சொத்துக்களில் என் அப்பா நாகராஜ படையாச்சி தான் விவசாயம் செய்து வந்தார் என்றால் ஆமாம் . என் அப்பாவிற்கு நான் விவசாயத்திற்கு உதவி செய்தேனா என்றால் அவர் தான் பார்த்து வந்தார் . கடைசியில் நான் உதவி செய்தேன் . கடைசியில் என்றால் அவர் இறப்பதற்கு 5, 6 வருடங்களுக்கு முன்பே அவரவர் பார்த்துக்கொள்ளுங்கள் என்று சொன்னதால் பார்த்துக்கொண்டோம். அவ்வாறு வாய்மொழியாக தான் எங்களை பார்த்துக்கொள்ள சொன்னார். அவ்வாறு நான் பார்த்துக்கொண்ட இடங்களின் சர்வே நம்பர் தெரியாது . விஸ்தீர்ணம் தெரியாது. என் தகப்பனாருடன் சாமிநாதன் சேர்ந்து விவசாயம் செய்தாரா என்றால் சாமிநாதன் விவசாயமே செய்ததில்லை . சாமிநாதனுக்கு மனோகரன் என்ற சாமிநாதன் என்று மற்றொரு பெயர் உண்டா என்றால் இல்லை . ஒரு பெயர்தான். சிவராமகிருஷ்ணனுக்கு சின்னதுரை என்று மற்றொரு பெயர் உண்டு என்றால் இல்லை. சிவமகிருஷ்ணன் மட்டும் தான். 3 ஆம் பிரதிவாதி சுந்தர்ராஜை கண்ணன் என்று கூப்பிடுவோம் என்றால் ஆமாம். சாமிநாதன், சிவராமகிருஷ்ணன் ஆகியோர் அவர்கள்

விசேசத்திற்கு எங்களுக்கு பத்திரிக்கையெல்லாம் கொடுக்க மாட்டார்கள். சாமிநாதன், சிவராமகிருஷ்ணனுக்கு இரண்டு பெயர்கள் உண்டு என்றாலும் நான் அவற்றை வழக்கிற்காக மறுக்கிறேன் என்றால் சரியல்ல. என் அப்பாவிற்கான வாரிசு சான்றிதழில் அவர்களுக்கு இரண்டு பெயர்கள் போடப்பட்டுள்ளதா என்றால் ஞாபகமில்லை. நான் பி.எஸ்சி படித்திருக்கிறேன். கும்பகோணம் அரசு கல்லூரியில் தான் பி .எஸ்சி படித்து முடித்தேன். நான் விவசாயம் தான் பார்க்கிறேன். என் அப்பா காலத்தில் இருந்து பார்த்து வருகிறேன். 2001 முதல் பார்த்து வருகிறேன். தற்போது நான் ஒரு 4 ஏக்கர் நஞ்சை, 2 ஏக்கர் புஞ்சை விவசாயம் பார்த்து வருகிறேன். அதில் 2 ஏக்கர் புஞ்சை போக்கியத்தில் உள்ளது. இந்த 6 ஏக்கரில், என் பையன் பெயரில் 2 ஏக்கர் வாங்கினோம். மனைவி பெயரில் 230 குழி புஞ்சை வாங்கினோம். என் பெயரில் 230 குழி திடல் வாங்கினோம். என் பெயரில் வாங்கப்பட்ட கிரைய பத்திர நகலை வாதி தாக்கல் செய்துள்ளார். நான் 2007 இல் கிரையம் வாங்கினேன். நான் 3,50,000/- ரூபாய் கொடுத்து என் பெயரில் வாங்கினேன். நான் விவசாயம் செய்வதில் இருந்தும், பிளாஸ்டிக் கம்பெனி நடத்தியதில் இருந்தும், என் மனைவி வீடு விற்று கிடைத்த பணத்தில் இருந்தும் இந்த இடத்தை வாங்கினேன். நான் மாவட்ட ஊராட்சி மன்ற கௌன்சிலராக இருந்தேன். அந்த பதவிக்கு சம்பளம் எதுவும் கிடையாது என்றால் சரி. 111/4 ஏ என்ற சர்வே நம்பரில் பிளாஸ்டிக் கம்பெனி வைத்திருந்தேன். அது என் அப்பா சொத்தா என்றால் ஆமாம். நீயூ சென்சுரி பாலிடெக் பிரவேட் டெக் என்பது பிளாஸ்டிக் கம்பெனியின் பெயர். அதற்கு லைசன்ஸ் பர்மிட் உள்ளது. தற்பொழுது இல்லை. அது சம்மந்தமான ஆவணம் எதுவும் தற்போது என்னிடம் இல்லை. நான் அவ்வாறு பிளாஸ்டிக் கம்பெனியே நடத்தவில்லை என்றாலும் வருமானத்தை காட்டுவதற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான்

வருமான வரி செலுத்தியிருந்தேன். கொரோனாவிற்கு முன்பு வரை நான் செலுத்தி வந்தேன் . வா.சா.ஆ– 6 என் பெயரில் ஏற்பட்ட கிரைய ஆவணம் என்றால் ஆமாம். சர்வே நம்பர் 126/5 பி, 27 செண்ட் கிரைய பெறப்பட்டுள்ளது என்றால் ஆமாம் . கிரைய தொகையாக 7,000/– காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரி. வா.சா.ஆ. 7 என் பெயரில் ஏற்பட்ட கிரைய ஆவணம் என்றால் ஆமாம். சர்வே நம்பர் 126/5 சி, 26 செண்ட் அலவந்திபுரத்தில் கிரைய பெறப்பட்டுள்ளது என்றால் ஆமாம் . கிரைய தொகை 7,000/– என்றால் ஆமாம். வா.சா.ஆ.8 என் பையன் ஈஸ்வர் பெயரில் ஏற்பட்ட கிரைய ஆவணம் என்றால் சரி. என்னை கார்டியனாக கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரி . சர்வே நம்பர் 126/10. தற்போதைய சர்வே நம்பர் 126/10 பி. விஸ்தீர்ணம் 79 செண்ட். இந்த கிரைய ஆவணம் ஏற்பட்ட தேதி 07/04/2006. இந்த சொத்து என் பையன் பெயரில் வாங்கும் போது என் அப்பா உயிருடன் இருந்தார் . வா.சா.ஆ. 9 என் பெயரில் ஏற்பட்டது. சர்வே நம்பர் 118/6 பி என்றால் சரி. இதில் கிரைய தொகை ரூபாய் 10,000/– என்று உள்ளது என்றால் ஆமாம். இது வாங்கும் போது என் தகப்பனார் உயிருடன் இருந்தார் என்றால் சரி . இந்த சொத்து என் தகப்பனார் வாங்கிய சொத்து என்றால் சரியல்ல . வா.சா.ஆ. 10 என் பெயரில் உள்ள கிரைய ஆவணம் என்றால் சரி . 10/01/2008 இல் இந்த கிரைய பத்திரம் ஏற்பட்ட தேதியில் என் தகப்பனார் உயிருடன் இருந்தார் என்றால் சரி. இந்த கிரையம் ரூபாய் 51,300/–க்கு வாங்கப்பட்டது என்றால் சரி . வா.சா.ஆ. 11 என் மனைவி பெயரில் வாங்கப்பட்ட கிரைய பத்திரம். 17/03/2009 இல் வாங்கப்பட்டது . கண்ணம்மாள் மற்றும் அழகிரிசாமி சின்னத்தாத்தா பக்கிரிசாமியின் வாரிசுகள் என்றால் சரி . அதில் கிரைய மதிப்பாக ரூபாய் 5,63,750/– என்று போடப்பட்டுள்ளது என்றால் சரி. என் மனைவி பெயரில் கிரையம் வாங்கும் போதும் என் அப்பா உயிருடன் இருந்தார் என்றால் ஆமாம். என்

மனைவி வீட்டுகுடித்தனம் தான் . என் மனைவி நகைகளை மற்றும் அவருடைய பூர்விக இடத்தை விற்ற தொகையைகொண்டு இந்த நிலத்தை வாங்கினார் . என் மாமனார் பெயர் புருசோத்துமன் . அவர் அக்கோ இந்தியாவில் புரடக்சன் மேனேஜராக இருந்தார் . அவருக்கு 4 பொண்ணு, ஒரு பையன் . எனக்கும் என் மனைவிக்கும் 1998 இல் திருமணமானது. என் மனைவியின் பூர்வீக இடத்தை விற்றதற்கு ஆதரவு இல்லையென்றால் என் மச்சான் என் மனைவியிடம் கையெழுத்து வாங்கினார் . அதற்காக கொடுத்த பணம். என் மச்சான் பெயர் நாகராஜன் . அவர் சென்னையில் இருக்கிறார் . அவரை விசாரித்தால் தெரியும் என்றால் தற்போது எங்களுக்குள் பேச்சு வார்த்தையில்லை. என் மாமனாருக்கு சொந்த வீடு சென்னையிலும் , பூர்வீக வீடு காஞ்சிபுரம் நாவல் கிராமத்தில் உள்ளது . என் மாமனார் 2002 இல் இறந்தார். எனக்கு எந்த வருமானமும் கிடையாது என்றாலும் , என் பெயரிலும் , என் மகன் மற்றும் மனைவி பெயரில் ஏற்பட்ட கிரையங்கள் அனைத்தும் என் தகப்பனார் நாகராஜ படையாச்சியால் வாங்கப்பட்டவை என்றால் சரியல்ல . அந்த சொத்துக்கள் பாகப் பிரிவினைக்கு உட்பட்ட சொத்துக்கள் என்றால் சரியல்ல . சிவக்குமார் என்னுடன் பிறந்த சகோதரர். வா.சா.ஆ. 15 சிவக்குமார் பெயரில் ஏற்பட்ட கிரைய பத்திரம் என்றால் சரி . இது வாங்கப்பட்ட தேதி 09/03/1999 என்றால் சரி. என் பெயரில் கிரைய வாங்கிய நான்கு நாட்களில் என் தம்பி சிவக்குமார் பெயரில் வா.சா.ஆ– 15 கிரையம் வாங்கப்பட்டுள்ளது என்றால் சரி. நஞ்சை எல்லாம் 2 போகம் தான். நிரந்தரமாக வருமானம் எவ்வளவு என்று சொல்ல முடியாது. என் அப்பாவிற்கு அதில் எவ்வளவு வருமானம் வரும் என்று தெரியாது . என் தகப்பனார் பூர்வீக சொத்தில் இருந்து கிடைத்த வருமானத்தை கொண்டு தான் அவர் பெயரிலும் , எங்கள் பெயரிலும் சொத்துக்களை வாங்கினார் என்றால் சரியல்ல . என் அப்பா

இரண்டாம் தாரத்து பிள்ளைகளுக்கு சொத்து வாங்கியது போல் முதல் தாரத்து பிள்ளைகளுக்கு வாங்கவில்லை என்றால் சரியல்ல. என் தாயார் கேட்டுக்கொண்டதன் பேரில் தான் என் தகப்பனார் இரண்டாம் தாரத்து பிள்ளைகளுக்கு அதிகமாக சொத்துக்களை வாங்கினார் என்றால் சரியல்ல. என் அம்மா 2002 லேயே இறந்துவிட்டார். என் தகப்பனார் 2014 இல் இறந்தார். இறப்பதற்கு 10 வருடங்களுக்கு முன்பே உடல் நிலை சரியில்லாமல் இருந்தார் என்றால் சரியல்ல . என் தகப்பனார் இறக்கும் போது 94 வயது. 90 வயது வரை காரை அவரே ஓட்டிவந்தார். அவரும் இறக்கும் வரை என்னுடன் தான் இருந்தார் என்றால் ஆமாம் . ஹேமலதா திருமணமாகி சென்னையில் இருந்தார் . விஜயராஜ் சென்னையில் வழக்கறிஞராக தொழில் செய்து வந்தார். நான் மட்டும் தான் அப்பாவுடன் இருந்தேன். வாதிகளுடன் எப்போதில் இருந்து பேச்சு வார்த்தை இல்லை என்றால் சேதுலட்சுமி , அமுதா இருண்டு பேரும் பேசுவார்கள். ராஜலெட்சுமி தேர்தலில் எதிர்த்து நின்றவருக்கு வேலை செய்ததில் இருந்து பேசுவதில்லை. ராஜலெட்சுமி என் தகப்பனாரை பார்க்க வீட்டிற்கு வருவார் என்றால் என் அப்பா இறப்பிதற்கு 4, 5 வருடத்திற்கு முன்பிருந்து வருவதில்லை. அதற்கு முன்பு என் அப்பா மீது ராஜலெட்சுமி வழக்கு போட்டார் . அந்த வழக்கில் இருந்து வருவதில்லை. பேசுவதில்லை. சேதுலட்சுமியும் அமுதாவும் வந்துக்கொண்டிருந்தார்கள். கடைசி 3 வருடங்கள் வருவதில்லை. அவர்கள் வரும்போது நான் வீட்டில் இருப்பேனா என்றால் சில நேரம் இருப்பேன். சில நேரம் இருப்பதில்லை. சாதாரணமாக அவர்கள் வீட்டிற்கு வந்தால் என் அப்பாவுடன் அவர்களை பேச விடுவதில்லை என்றால் சரியல்ல. என் அப்பா இறப்பதற்கு 10 வருடத்திற்கு முன்பிருந்து முதல் தாரத்து பிள்ளைகள் வீட்டிற்கு வருவதில்லையா என்றால் ஆண்கள் வந்துக்கொண்டிருந்தார்கள். அண்ணன் மனைவி

வருவார்கள். பெண் தான் அவர் இறப்பதற்கு 3 வருடங்கள் முன்பிருந்து வருவதில்லை. சாமிநாதனும், சிவராமகிருஷ்ணனும் எங்கள் ஊரில் தான் இருக்கிறார்கள். சாமிநாதன் தாத்தா இருந்த வீட்டில் இருக்கிறார். சாமிநாதன், சிவராமகிருஷ்ணன் மற்றும் பெண்கள் யார் வந்தாலும் நங்கள் என் அப்பாவுடன் பேசவிடுவதில்லை என்றாலும் கூடவே இருப்போம் என்றால் சரியல்ல. 3 ஆம் பிரதிவாதி சுந்தர்ராஜன் கும்பகோணத்தில் தான் வசித்து வருகிறார் என்றால் சரி. அவருடைய பாட்டி வீட்டில் இருக்கிறார் என்றால் சரி. அவர் பிறந்த போது அவருடைய அம்மா இறந்துவிட்டபடியால் அவர் பாட்டி வீட்டில் தான் வளர்ந்தார் என்றால் சரி. அவரும் அப்பாவை பார்க்க வருவார் என்றால் சரி. நான் பிளாஸ்டிக் கம்பெனி நடத்தி வந்த புல எண் 111/4 ஏ 1 என்கின்ற இடத்தில் நான் நடத்தி வந்த பிளாஸ்டிக் கம்பெனியின் எம் .டி. ஜானகிராமன் என் தகப்பனார் நாகராஜ படையாச்சியுடன் ஏற்படுத்திக்கொண்ட வாடகை ஒப்பந்தம் தான் இந்த ஆவணம் என்றால் சரி. **வா.சா.ஆ– 59 ஆகும்.** மரப்பட்டறை நான் நடத்தவில்லை. அந்தயிடத்தை நான் ராஜேஷ் கண்ணாவிற்கு அடமான வைத்து நான் 20 லட்சம் கடனாக பெற்றுள்ளேன் என்றால் நான் அந்த ஆவணத்தை காண்பித்து என் மகனுக்கு கல்வி கடன் பெற்றுள்ளேன். அது **வா.சா.ஆ. 60 ஆகும்**. சர்வே நம்பர் 158/பி2 என்பதை நான் தனலெட்சுமி சீனிவாசன் சிட் பண்டில் சீட்டு போட்டதற்காக சீட்டு எடுத்த பிறகு பாக்கி தொகைக்காக Collateral ஆக இந்த பத்திரத்தை நான் கொடுத்தேன். அது **வா.சா.ஆ. 61 ஆகும்**. அசல் வழக்கு 82/2010 பாபநாசம் நீதிமன்றத்தில் என் மீதும், என் தகப்பனார் மீதும் இந்த வழக்கின் வாதி ராஜலெட்சுமி தாக்கல் செய்தார். அந்த வழக்கில் நான் சாட்சியமளித்துள்ளேன் என்றால் ஆமாம். அந்த வழக்கு வாதி சாதகமாக தீர்ப்பாகிவிட்டது என்றால் சரியல்ல. அந்த வழக்கின் மீது மேல்முறையீடு தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது.

அந்த பிரமாண வாக்குமூலத்தில் நான் என் தகப்பனார் நீதிமன்றத்திற்கு வராததற்கு காரணமாக அதிக நடமாட்டம் இல்லாமல் இருக்கிறார் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் ஆமாம் . வா.சா.ஆ.33 நடேச படையாச்சி மகன் நாகராஜ படையாச்சி எழுதி வைத்த உயில் என்றால் சரி . இந்த உயில் எழுதிய போது என் தகப்பனார் எங்கள் வீட்டில் தான் இருந்தார் என்றால் ஆமாம் . இதை எங்கே வைத்து தயாரிக்கப்பட்டது , என் தகப்பனார் எங்கு வைத்து எழுதினார் என்ற விவரம் எனக்கு தெரியாது . என் தகப்பனார் இந்த உயிலை மாவட்ட பதிவாளரிடம் நேரடியாக போய் டெப்பாசிட் செய்திருந்தார் . அந்த டெப்பாசிட் செய்த தேதி விவரம் எனக்கு ஞாபகமில்லை. இந்த உயிலில் கண்ட 25 பக்கமும் யார் சொல்லி யாரால் தயார் செய்யப்பட்டது என்று விவரம் எனக்கு தெரியாது . என் வீடு இருப்பது சுவாமிமலை சார் பதிவாளர் எல்லைக்குள் தான் என்றால் ஆமாம். ஆனால் என் அப்பா உயிலை டெப்பாசிட் செய்தது கும்பகோணத்தில் என்றால் மாவட்ட பதிவாளர் அலுவலகம் கும்பகோணத்தில் தான் உள்ளது . என் அப்பா உயில் டெப்பாசிட் செய்த விவரத்தை அனைவரிடமும் சொல்லியுள்ளார் . அதிலுள்ள விவரம் ஆனால் தெரியாது. டெப்பாசிட் செய்திருந்த உயிலை யார் மனு செய்து பார்க்க வேண்டும் என்று சொன்னார்கள் என்றால் அக்காக்கள் மற்றும் சிவராமகிருஷ்ணன், அண்ணன்கள் கொடுத்தார்கள். என் அப்பா இறந்து ஒரு 6, 7 மாதம் கழித்து சார் பதிவாளர் அலுவலகத்தில் இந்த மனு கொடுக்கப்பட்டது. இந்த 6, 7 மாதத்தில் என் அப்பா விட்டுட்டு போன சொத்து பற்றி பஞ்சாயத்து நடந்ததா என்றால் இல்லை . உயிலை திறந்து பார்த்த போது நானும் போயிருந்தேன். இந்த உயிலிலேயே என் அப்பா தன் அப்பா எழுதிவைத்த உயில் மூலம் கிடைத்த சொத்துக்களையும் , தான் சுயமாக சம்பாதித்த சொத்துக்களையும் என் மனைவிகள் பெயரில் நான் வாங்கிய சொத்தில் எனக்குள்ள பங்கையும் எழுதி வைப்பதாக கண்டு

எழுதியுள்ளார் என்றால் சரி . சேதுலட்சுமிக்கு வயல் எழுதி வைத்திருக்கிறார். சர்வே எண் ஞாபகமில்லை . சேதுலட்சுமிக்கு கார்த்திகேயன் என்று ஒரு மகன் இருக்கிறார். ஏ செட்டியூலில் அயிட்டம் 6 யை கார்த்திகேயனுக்கு எழுதி வைத்துள்ளார் என்றால் சரி . அந்த சொத்து இன்று வரை என்னிடம் உள்ளது என்றால் சரியல்ல . இந்த உயில் எழுதி டைப் அடிக்கப்பட்டதா , நேரடியாக டைப் அடிக்கப்பட்டதா என்று எனக்கு தெரியாது . இந்த உயிலில் உள்ள நாகராஜ படையாச்சியின் கையெழுத்து ஒவ்வொரு பக்கத்திலும் வேறுபடுகிறது என்றால் சரியல்ல. இந்த உயிலில் சாட்சி கையெழுத்து போட்டது யார் என்று எனக்கு தெரியாது . இதில் சாட்சி கையெழுத்து போட்டுள்ள சாமிநாதன், கருப்பையன் மற்றும் செல்வம் ஆகியோர் உயிருடன் இருக்கிறார்கள். 3 வது சாட்சியாக கையெழுத்து போட்டுள்ள பன்னீர்செல்வம் ஜெயராமன் என்பவரின் மகன். எங்கள் பங்காளி. முதல் சாட்சியாக கையெழுத்து போட்டுள்ள எங்கள் ஊர் போஸ்ட் ஆபீசில் வேலை பார்க்கிறார். இந்த உயிலின் அசல் என்னிடம் இல்லை . சார் பதிவாளர் அலுவலகத்தில் உள்ளது . இந்த உயிலே என் அப்பாவால் தயாரிக்கப்படவில்லை என்றாலும் நானும் விஜயகராஜும் சேர்ந்து என் அப்பா தயாரித்தது போல் உயில் தயாரித்து டெப்பாசிட் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. இந்த உயில் எழுதிய காலத்தில் என் அப்பா நல்ல சுயநினைவுடன் நல்ல நடைஉடையாக இல்லை என்றால் சரியல்ல . எனக்கும் விஜயராஜுக்கும் கொடுத்த சொத்துக்கள் பிளாட் போட்டு விற்கப்பட்ட சொத்துக்கள் என்றால் சரியல்ல. அவை நஞ்சை நிலங்கள். இந்த உயில் படி சாமிநாதனுக்கும் , சுந்தர்ராஜனுக்கும் சொத்துக்கள் கொடுக்கப்படவில்லை என்றால் தெரியாது. உயிலில் எனக்கு அசையும் சொத்துக்கள் அனைத்தும் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. கார் மட்டும் தான் எனக்கு கொடுத்தார் . இந்த உயிலில் இதன் அசல் என்

மகன் மகேந்திரனிடம் இருக்க வேண்டியது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு தான் குறிப்பிடப்பட்டுள்ளது ஆனால் சார் பதிவாளர் அசலை கொடுக்கவில்லை. அசல் உயில் என்னிடம் தான் உள்ளது என்றாலும், நான் அதை தாக்கல் செய்தால் உண்மை தெரிந்துவிடும் என்பதற்காக என்னிடம் இல்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. சாட்சிகள் முன்னிலையில் என் அப்பா கையெழுத்து போடவில்லை என்றாலும் என் அப்பா கையெழுத்து நாங்கள் போட்டுவிட்டு பின்னிட்டு சாட்சிகளிடம் கையெழுத்து வாங்கியுள்ளோம் என்றால் சரியல்ல . இந்த உயிலில் அரசாங்க புறம்போக்கு சொத்துக்களையும் சேர்த்து எழுதியுள்ளோம் என்றால் சரியல்ல . இந்த உயில் என் அப்பாவால் எழுதபடாததால் தான் அவருக்கு சொந்தமில்லாத சொத்துக்களையும் சேர்த்து இந்த உயிலில் எழுதியுள்ளோம் என்றால் சரியல்ல. என் அப்பா அக்ரிமெண்ட் போட்டு வாங்காத சொத்துக்களையும் சேர்த்து நாங்கள் எழுதியுள்ளோம் என்றால் சரியல்ல . இந்த உயிலே செல்லாத உயில் என்றாலும் அதனடிப்படையில் தாவா சொத்துக்களில் நான் எந்த உரிமையும் கோரமுடியாது என்றால் சரியல்ல . சொத்துக்கள் வாங்கும் அளவிற்கு எனக்கு வருமானமே கிடையாது என்றால் சரியல்ல . சொத்துக்கள் ஆதியில் சீனன் படையாச்சிக்கு சொந்தம் என்றாலும் அதனடிப்படையில் பாகத்தில் நடேச படையாச்சிக்கும் நடேச படையாச்சியிடமிருந்து நாகராஜ படையாச்சிக்கும் கிடைத்த சொத்துக்கள் என்பதால் இது கூட்டு குடும்ப சொத்துக்கள் என்றால் சரியல்ல . கூட்டு குடும்ப சொத்துக்களை தனிப்பட்ட முறையில் நாகராஜ படையாச்சிக்கு உரிமை கிடையாது என்றால் சரியல்ல . என் மனைவி அவர் வாங்கிய சொத்தை வேலாயுதத்திற்கு விற்றிருக்கிறார். இந்த கிரைய ஆவணத்தில் உயில் படி கிடைத்த சொத்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் என் மனைவி மருத்து செலவிற்காக கொடுத்த பணத்திற்காகவும் உடல் நிலை

சரியில்லாத போது கவனித்ததற்காகவும் பணமாக கொடுக்காமல் சொத்தாக கொடுத்துள்ளார். உயில் மூலமாக என் அப்பா என் மனைவிக்கு எழுதி வைத்துள்ளார். இந்த உயில் படி என் மனைவிக்கு எந்த உரிமையும் ஏற்படாது என்றால் சரியல்ல. அந்த கிரைய ஆவணத்தின் கணினி நகல் **வா.சா.ஆ.62 ஆகும்.** தாவா சொத்துக்கள் கூட்டு குடும்ப சொத்துக்கள் என்பதால் வாதிகள் கோரிய பரிகாரம் கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல. என் பெயரிலும் விஜராஜ் பெயரிலும் வாங்கிய சொத்துக்கள் கூட்டு குடும்ப சொத்துக்கள் என்றால் சரியல்ல . இந்த உயிலை பற்றி விஜயராஜை கேட்டால் தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. வாதி 86/2015 வழக்கு போட்ட விவரம் தெரியும். வாதி கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

**1, 3 பிரதிவாதிகள் இதே குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக தெரிவித்தனர்.**

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.